**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்**

முன்னிலை. **திரு.கா.நிலவரசன்,** B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

2026 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 28 ம் நாள் செவ்வாய்கிழமை

**இ.ம எண்.2/2025 மற்றும் இ.ம.எண்.3/2025**

**இல்**

**அசல் வழக்கு எண்.57/2025**

1. திரு. சேகர்,

2. திருமதி. நளினி – மனுதாரர்கள்/வாதிகள்

–எதிராக–

1. திரு.ராஜாராம்,

2. திரு. தினேஷ் குமார்,

3. திரு. கிருஷ்ணமூர்த்தி – எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுக்கள் கடந்த 11.06.2025 அன்று இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 21.07.2026 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் எம்/எஸ்.சிவமணி லா அசோசியேட்ஸின் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. M. கார்த்திக்** அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.V.சந்திரன்,** B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை

பரிசீலித்து இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வாதத்தைக் கேட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>பொதுவான உத்தரவு</u>

இம்மனுக்களானது கட்டளை 39 விதி 1 (ம) 2 பிரிவு 151 உரிமையியல் நடைமுறை சட்டத்தின் கீழ் மனுதாரர்களின் அமைதியான அனுபவம் மற்றும் சுவாதீனத்தில் உள்ள தாவா C அட்டவனை சொத்தில் எதிர்மனுதாரர்கள் எவ்வித இடையூறும், பாராதீனமும் செய்யக்கூடாது என்றும், மனுதாரர்கள் A மற்றும் B அட்டவணை திருக்கோயில்களில் நுழைவதையும், பூஜைகள் செய்வதையும் எதிர்மனுதாரர்கள் எவ்வகையிலும் தடுத்து இடையூறு செய்யக்கூடாது என்று இம்மனுவில் அசல் வழக்கு முடியும் வரையில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர்கள் தரப்பில் முன்வைக்கப்பட்ட வாதத்தில், மனு A மற்றும் B அட்டவணை சொத்துக்கள் அருள்மிகு ஏரிக்கரை பழண்டி அம்மன் கோயில் மற்றும் அருள்மிகு செல்வ விநாயகர் கோயில் என்றும், C அட்டவணை சொத்து செல்வவிநாயகர் கோயிலுக்கு சொந்தமான சொத்துக்கள் என்றும், இந்நிலையில் மேற்கண்ட கோயில்களில் மனுதாரர்களின் குடும்பத்தார் பூஜைகள் உள்ளிட்ட சேவைகள் செய்து வந்ததை தொடர்ந்து, கடந்த 1965 ஆம் ஆண்டு கிராம மக்கள்

மனுதாரர்கள் குடும்பத்தார் கோயில்களுக்கு செய்து வரும் திருப்பணிகளுக்காக ஊதியம் ஏதும் வழங்காமல், செல்வ விநாயகர் கோயிலுக்கு சொந்தமான C அட்டவணை சொத்தை மனுதாரர்கள் குடும்பத்தாரின் அனுபவத்திற்கு கொடுத்து அதில் வரும் மகசூலை பயன்படுத்திக் கொள்ள எழுத்து மூலமாக ஆவணம் எழுதிக் கொடுத்ததாகவும், அப்போது முதல் மனுதாரர்கள் குடும்பத்தார் மனு C அட்டவணை சொத்தை அனுபவித்து வந்த நிலையில், கடந்த 2007 ஆம் ஆண்டு ஈஸ்ட் கோஸ்ட் கன்ஸ்ட்ரக்சன் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் என்ற நிறுவனம் மனு C அட்டவணை சொத்தில் இடையூறு செய்ததால், 1ம் மனுதாரர் செங்கல்பட்டு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மேற்கண்ட நிறுவனத்திற்கு எதிராக சுவாதீனம் கோரி தாக்கல் செய்த அ.வ.எண்.228/2007 என்ற வழக்கில் 1ம் மனுதாரருக்கு ஆதரவாக கடந்த 24.11.2012 அன்று தீர்ப்பாகியதாகவும், அதனைத் தொடர்ந்து மனு C அட்டவணை சொத்தில் மனுதாரர்கள் குடும்பத்தார் தான் நாளது தேதி வரையில் அனுபவ சுவாதீனத்தில் இருந்து வருவதாகவும், இந்நிலையில் எதிர்மனுதாரர்கள் மனு C அட்டவணை சொத்தை மனுதாரர்கள் குடும்பத்தாரிடமிருந்து ஆக்கிரமிப்பு செய்யும் எண்ணத்தில் இடையூறு செய்து வந்ததால், மனுதாரர்கள் தரப்பில் காவல்

நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டதாகவும், அதன் பிறகு எதிர்மனுதாரர்கள் எவ்வித இடையூறும் செய்யாமல் இருந்து வந்த நிலையில், கடந்த 26.03.2025 அன்று எதிர்மனுதாரர்கள் அடியாட்களுடன் தாவா சொத்தில் அத்துமீறி பிரவேசிக்க முயற்சி செய்ததாகவும், எனவே அது சம்பந்தமாக மனுதாரர்கள் கடந்த 28.03.2025 காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளதாகவும், எனவே மனு C அட்டவணை சொத்தை மனுதாரர்கள் அனுபவிப்பதை எதிர்மனுதாரர்கள் எவ்வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என்றும், மனுதாரர்கள் மனு A மற்றும் B அட்டவணை சொத்தான திருக்கோயில்களில் நுழைவதையும், பூஜைகள் செய்வதையும் எதிர்மனுதாரர்கள் எவ்வகையிலும் தடுத்து இடையூறு செய்யக்கூடாது என்றும் மேற்கண்ட மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வாதிடப்பட்டுள்ளது.

3. மாறாக, எதிர்மனுதாரர்கள் தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள வாதத்தில், மேற்கண்ட திருக்கோயில்களும், ஸ்ரீ பிடாரி ஏகாத்தம்மன் திருக்கோயில் மற்றும் செங்கேணி அம்மன் திருக்கோயில் ஆகியவை நாவலூர் கிராம மக்களால் கடந்த 300 ஆண்டுகளுக்கும் மேலாக பராமரித்து வரப்படுவதாகவும், இந்நிலையில்

கடந்த 1965 ஆம் ஆண்டு மேற்கண்ட 4 கோயில்கள் சம்பந்தமாக எல்லப்ப தம்பிரான் என்பவருக்கு மேற்கண்ட கோயில்களின் திருப்பணிகள் மற்றும் ஆலய பூஜைகள் செய்ய எழுத்து மூலமாக அனுமதிக்கப்பட்டதாகவும், அதனை தொடர்ந்து புல எண்.147ல் உள்ள 48 சென்ட் நிலங்களில் இருந்து வரும் மகசூலை பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்பட்டதாகவும், மேற்கண்ட சூழ்நிலையில் மேற்கண்ட கோயில்கள் சம்பந்தமாக கடந்த 07.08.1965 அன்று வேம்புலி நாயுடு, ராமச்சந்திரன், கிருஷ்ணமூர்த்தி, ரங்கநாத கிராமணி, சம்பந்தமூர்த்தி, ராமலிங்க நாயுடு, கிரிஷ்டப்ப செட்டியார், முருகப்ப செட்டியார் மற்றும் பூபதி ஆகியோரின் குடும்பங்களுக்கு மேற்கண்ட கோயில்களின் பராமரிப்பு, திருப்பணிகள் உள்ளிட்ட பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டதாகவும், அதனைத் தொடர்ந்து எல்லப்ப தம்பிரான் மேற்கண்ட பணிகளில் ஈடுபடவில்லை என்றும், திருக்கோயில்களின் நிர்வாகம் முழுவதும் கிருஷ்ணமூர்த்தி கிராமணி என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும், அவர் தான் மேற்கண்ட கோயில்களின் தற்காலிக தர்மகர்த்தாவாக கிராம மக்களால் நியமிக்கப்பட்டதாகவும், அதனை தொடர்ந்து செல்வவிநாயகர் கோயிலுக்கு சொந்தமான சொத்துக்கள் சம்பந்தமாக தேவதாயம் ஏற்படுத்தப்பட்டு தற்காலிக தர்மகர்த்தாவான கிருஷ்ணமூர்த்தி

கிராமணி என்பவரின் பெயர் மேற்கண்ட கோயில்களுக்கு சொந்தமான சொத்து ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், மேலும் 2ம் எதிர்மனுதாரரின் தாத்தாவான குப்புசாமி செட்டியார் மேற்கண்ட திருக்கோயில் பராமரிப்பு பணிகளை பார்த்துவந்ததாகவும், அதன் பிறகு 2ம் எதிர்மனுதாரரின் தந்தை சண்முக செட்டியார் மேற்கண்ட நான்கு கோயில்களின் திருப்பணிகளையும், பூஜைகளையும் செய்து வந்ததாகவும், கடந்த 1994 ஆம் ஆண்டு ஏரிக்கரை ஸ்ரீ பழனியாண்டி அம்மன் கோயில் ஆடி திருவிழாவையும் சண்முக செட்டியார் செய்ததாகவும், அதற்காக கிராம மக்களிடமிருந்து நன்கொடைகள் பெற்று அதன் மூலமாக மேற்கண்ட திருவிழாவை நடத்தப்பட்டதாகவும், அதன் பிறகு மேற்கண்ட நான்கு கோவில்களும் சிதிலமடைந்ததால், அதனை புதியதாக கட்ட வேண்டும் என்று தீர்மானித்ததன் படி, ஸ்ரீ பழனியாண்டியம்மன் திருக்கோயிலுக்கு செய்யப்படும் அபிஷேகம் உள்ளிட்ட ஆராதனைகளுக்கு கட்டணம் வசூலிக்கும் பொருட்டு ரசீது புத்தகங்கள் அச்சடிக்கப்பட்டதாகவும், மேற்கண்ட கட்டணங்கள் வாயிலாக மேற்கண்ட கோயில்கள் பராமரித்து வரப்படுவதாகவும், இந்நிலையில் கடந்த 2018 ஆம் ஆண்டு மேற்கண்ட கோயில்களை இடித்து புதியதாக கோயில் கட்டுவதற்காக பணிகள்

தொடங்கப்பட்டு அதற்காக நன்கொடைகளும் வசூலிக்கப்பட்டதாகவும், கடந்த 10.06.2024 மற்றும் 12.06.2024 ஆகிய நாட்களில் மேற்கண்ட கும்பாபிஷேகமும் நடத்தப்பட்டதாகவும், எனவே மேற்கண்ட காரணங்கள் அடிப்படையில் இம்மனுக்களை தள்ளுபடி செய்ய வேண்டும் என வாதிடப்பட்டுள்ளது.

4. இருதரப்பு வாதங்கள் மற்றும் வழக்காவணங்கள் ஆகியவற்றை கவனத்துடன் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் தரப்பில் மனு A மற்றும் B அட்டவணை சொத்துக்களான திருக்கோயில்களில் மனுதாரர்கள் குடும்பத்தார் காலம் காலமாக திருப்பணிகள் செய்து வருவதாகவும், அதனைத் தொடர்ந்து B அட்டவணை சொத்தான செல்வவிநாயகர் திருக்கோவிலுக்கு சொந்தமான மனு C அட்டவணை சொத்து சம்பந்தமாக மனு கிராம மக்கள் மனுதாரர்கள் குடும்பத்தாருக்கு அச்சொத்தை சுவாதீனம் கொடுத்ததாகவும், அப்போதிலிருந்து மனுதாரர்கள் குடும்பத்தார் அதனை ஆண்டு அனுபவித்து வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

5. ஆனால் மனுதாரர்கள் தரப்பில் மனு A மற்றும் B அட்டவணை

சொத்துக்களான திருக்கோயில்களில் நாளது தேதி வரையில் மனுதாரர்கள் குடும்பத்தார் தான் திருப்பணிகள் மற்றும் பூஜைகள் செய்து வருவதற்கான போதுமான ஆவணங்கள் ஏதும் இந்நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்படவில்லை. மாறாக எதிர்மனுதாரர்கள் தரப்பில் முன்னிறுத்தப்பட்ட எதிர்வாதத்தில், மேற்கண்ட பூஜை உள்ளிட்ட திருப்பணிகள் சம்பந்தமாக 1965 ஆம் ஆண்டு 9 குடும்பங்களுக்கு கிராம மக்கள் உரிமைகளை வழங்கியுள்ளதாகவும், அதனைத் தொடர்ந்து கிருஷ்ணமூர்த்தி கிராமணி என்பவர் தற்காலிக தர்மகர்த்தாவாக நியமிக்கப்பட்டு, மேற்கண்ட திருக்கோயில்கள் திருப்பணிகளை நடைப்பெற்று வந்ததாகவும், அதனைத் தொடர்ந்து, 2ம் எதிர்மனுதாரரின் தாத்தா குப்புசாமி செட்டியார் என்பவர் மேற்கண்ட திருக்கோயில்களின் திருப்பணிகளை செய்து வந்ததாகவும், அதனைத் தொடர்ந்து 2ம் எதிர்மனுதாரரின் தந்தை சண்முக செட்டியார் மேற்கண்ட கோயில்களின் திருப்பணிகள் உள்ளிட்ட பூஜைகள் மற்றும் திருவிழா ஆகியவற்றை செய்து வந்ததாகவும், எனவே தற்போது வரை 2ம் எதிர்மனுதாரர் குடும்பத்தார் தான் மேற்கண்ட திருப்பணிகளை செய்து வருவதாகவும், மேலும் கிராம மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து மேற்கண்ட கோயில் திருவிழாக்களை நடத்தி வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

6. அதனை சார்ந்து எதிர்மனுதாரர்கள் தரப்பில், மேற்கண்ட திருக்கோயில்கள் சம்பந்தமாக நடைபெற்ற திருவிழா மற்றும் கும்பாபிஷேக அழைப்பிதழ் ஆகியவை சான்றாவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் முன்வைக்கப்பட்ட மற்றொரு வாதத்தில், மேற்கண்ட திருக்கோயில்களின் பராமரிப்பு செலவுகளுக்காக, திருக்கோயில்களில் நடைபெறும் அபிஷேகங்களுக்கு கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு வருவதாக குறிப்பிடப்பட்டு அதன் ரசீது புத்தகங்களும், இரப்பர் முத்திரைகளும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்களாக குறியீடும் செய்யப்பட்டுள்ளது.

7. எனவே மனுதாரர்கள் தரப்பில் முன்வைக்கப்பட்ட வாதத்தின் படி, A மற்றும் B அட்டவணை சொத்துக்களான திருக்கோயில்களின் திருப்பணிகள் மற்றும் பூஜை உள்ளிட்டவை மனுதாரர்கள் குடும்பத்தார் தான் தற்போது வரை செய்து வருவதாக முன்னிறுத்தப்பட்ட வாதங்களுக்கு ஆதரவாக மனுதாரர்கள் தரப்பில் போதுமான சான்றாவனங்கள் முன்னிலைப்படுத்தப்படாத சூழ்நிலையில், மேற்கண்ட திருக்கோயில்களில் திருப்பணிகள் மற்றும் பூஜைகள் ஆகியவற்றை

மனுதாரர்கள் குடும்பத்தார் தற்போது வரை செய்து வருகிறார்களா? என்பது குறித்து, அசல் வழக்கின் விசாரணையின் போது இரு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாணங்கள் ஆகியவற்றை முழுமையாக பரிசீலனை செய்த பிறகே தீர்வு காண முடியும்.

8. இந்நிலையில், மனு C அட்டவணை சொத்துக்கள் சம்பந்தமாக மனுதாரர்கள் தரப்பில் முன்வைக்கப்பட்ட வாதத்தில், மனுதாரர்கள் குடும்பத்தார் மேற்கண்ட திருக்கோயில்களில் செய்து வந்த திருப்பணிகளுக்காக மனு கிராம மக்கள் ம.சா.ஆ.1 ஆவணம் மூலமாக மேற்கண்ட சொத்தின் சுவாதினத்தை மனுதாரர்கள் குடும்பத்தார் வசம் ஒப்படைத்ததாகவும், அப்போதிலிருந்து மனு C அட்டவணை சொத்துக்கள் மனுதாரர்கள் குடும்பத்தாரின் அனுபவ சுவாதீனத்தில் இருந்து வந்த நிலையில், கடந்த 2007 ஆம் ஆண்டு ஈஸ்ட் கோஸ்ட் கன்ஸ்ட்ரக்ஷன் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் என்ற நிறுவனம் மனு சொத்துக்களில் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்ததால், 1ம் மனுதாரர் தரப்பில் செங்கல்பட்டு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் சொத்தின் சுவாதினத்தின் அடிப்படையில் உரிமை விளம்புகை பரிகாரமும், சுவாதினத்தை திரும்ப கோரியும்

அ.வ.எண்.288/2007 வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாகவும், மேற்கண்ட வழக்கில் நீதிமன்றம் கடந்த 24.11.2012 அன்று 1ம் மனுதாரருக்கு ஆதரவாக தீர்ப்பளித்துள்ளதாகவும் வாதிடப்பட்டுள்ளது.

9. மேற்கண்ட தீர்ப்பு நகல் மற்றும் தீர்ப்பாணை நகல் ஆகியவை முறையே ம.சா.ஆ.2 மற்றும் ம.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட சான்றாவணங்களை பரிசீலனை செய்ததில், மேற்படி ஈஸ்ட் கோஸ்ட் கன்ஸ்ட்ரக்ஷன் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் மனு C அட்டவணை சொத்தில் மணல் கொட்டி ஆக்கிரமிப்பு செய்ததாக, மேற்கண்ட நிறுவனத்திற்கு எதிராக 1ம் மனுதாரர் சொத்தின் சுவாதீனத்தின் அடிப்படையில் உரிமை விளம்புகை பரிகாரமும், சுவாதீனத்தை ஒப்படைக்க வேண்டும் என்றும் வழக்கு தாக்கல் செய்துள்ளதும், மேற்கண்ட அசல் வழக்கில் மேற்படி நிறுவனம் தொடர்ந்து நடத்த முன்வராததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டு, 1ம் மனுதாரர் கோரிய பரிகாரங்கள் அவருக்கு ஆதரவாக தீர்ப்பு செய்யப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

10. இந்நிலையில், எதிர்மனுதாரர்கள் தரப்பில் முன்வைக்கப்பட்ட

எதிர்வாதத்தில், மனு C அட்டவணை சொத்துக்கள் சம்பந்தமாக தேவதாயம் ஏற்படுத்தப்பட்டு, தற்காலிக தர்ம கர்த்தா பெயரில் ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அதனைத் தொடர்ந்து மேற்கண்ட சொத்துக்கள் கோயில் நிர்வாகத்தின் சார்பில் பராமரிக்கப்பட்டு வருவதாக எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

11. அதற்கு ஆதரவாக C அட்டவணை சொத்திற்கு செல்வவிநாயகர் திருக்கோயில் பெயரில் வழங்கப்பட்டுள்ள பட்டா உள்ளிட்ட வருவாய் துறை ஆவணங்களின் நகல்கள் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சான்றாவாணங்களாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரர்கள் தரப்பு வாதத்தின் படி, மனு C அட்டவணை சொத்துக்கள் சம்பந்தமாக மேலே விவாதிக்கப்பட்ட நிறுவனத்திற்கு எதிராக 1ம் மனுதாரர் வழக்கு தாக்கல் செய்து, அதில் அவருக்கு ஆதரவாக தீர்ப்பு செய்யப்பட்டிருந்தாலும், மேற்கண்ட அசல் வழக்கில் இம்மனுவின் எதிர்மனுதாரர்கள் தரப்பினர்களும் இல்லை.

12. மேலும் மனு சொத்துக்கள் தற்போது வரை மனுதாரர்கள் வசம் தான்

அனுபவத்தில் உள்ளது என்பதற்கான ஆவணங்களும் மனுதாரர்கள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. இந்நிலையில் மனு C அட்டவணை சொத்துக்கள் திருக்கோயில் நிர்வாகத்தின் சார்பில் பராமரிக்கப்பட்டு வருவதாக எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்கள் தரப்பு வாதத்தின் படி மனு C அட்டவணை சொத்துக்கள் மனுதாரர்களின் குடும்பத்தாரின் அனுபவ சுவாதீனத்தில் தான் இருந்து வருகிறதா? என்பதையும், இம்மனுவின் அசல் வழக்கின் விசாரணை போது இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை முழுமையாக பரிசீலனை செய்யும்போது தான் தெரியவரும். எனவே மேற்கண்ட காரணங்கள் அடிப்படையில் மனுதாரர்கள் கோரிய பரிகாரங்களை முழுமையாக வழங்க முடியாது என்று முடிவு செய்து, வழக்கின் தன்மையை கருதி இம்மனுவை பகுதியாக அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**இறுதியாக, இம்மனுவை பகுதியாக அனுமதித்து, இம்மனுவின் அசல் வழக்கு முடியும் வரையில் மனுச்சொத்துகளில் தற்போதுள்ள நிலையே தொடரவேண்டும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. செலவுத்தொகை**

**இல்லை.**

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்துதட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று (28.07.2026) இத்திறந்த நீதிமன்றத்தில் இவ்அவையறிய பகரப்படுகிறது.

NILAVARASAN KASI

Digitally signed by NILAVARASAN KASI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருப்போரூர்.**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்–</u>**இல்லை

**<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்;</u>**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 07.08.1965 | மனு கிராம மக்கள் எழுதிக்கொடுத்த ஆவணம் நகல் |
| ம.சா.ஆ.2 | 24.11.2012 | அ.வ.எண்.228/2007 வழக்கின் தீர்ப்பு நகல் |
| ம.சா.ஆ.3 | 24.11.2012 | அ.வ.எண்.228/2007 வழக்கின் தீர்ப்பாணை நகல் |
| ம.சா.ஆ.4 | – | 1ம் மனுதாரர் காவல் ஆனையரிடம் கொடுத்த புகார் நகல் |
| ம.சா.ஆ.5 | 26.09.2018 | தாழம்பூர் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகார் ஏற்பு இரசீது நகல் |
| ம.சா.ஆ.6 | 03.01.2025 | காவல் அழைப்பாணை நகல் |
| ம.சா.ஆ.7 | 27.03.2025 | காவல் அழைப்பாணை நகல் |
| ம.சா.ஆ.8 | 06.04.2025 | புகார் நகல் மற்றும் புகார் ஏற்பு இரசீது |

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்–</u>** இல்லை

DM CUM JMC,  THIRUPORUR, DATED 28.07.2026.

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்;**

| | | |
|---|---|---|
| எ.சா.ஆ.1 | 26.8.1966 | தேவதாயம் நகல் |
| எ.சா.ஆ.2 | – | பட்டா நகல் |
| எ.சா.ஆ.3 | – | பட்டா நகல் |
| எ.சா.ஆ.4 | – | அடங்கல் நகல் |
| எ.சா.ஆ.5 | – | பட்டா நகல் |
| எ.சா.ஆ.6 | 11.08.2024 | ஸ்ரீ பழண்டியம்மன் கோயில் திருவிழா அழைப்பிதழ் |
| எ.சா.ஆ.7 | 13.08.2017 | ஸ்ரீ பழண்டியம்மன் கோயில் திருவிழா அழைப்பிதழ் |
| எ.சா.ஆ.8 | 11.08.2024 | ஸ்ரீ பழண்டியம்மன் கோயில் திருவிழா அழைப்பிதழ் |
| எ.சா.ஆ.9 | 13.08.2023 | ஸ்ரீ பழண்டியம்மன் கோயில் திருவிழா அழைப்பிதழ் |
| எ.சா.ஆ.10 | 11.08.2024 | ஸ்ரீ பழண்டியம்மன் கோயில் திருவிழா அழைப்பிதழ் |
| எ.சா.ஆ.11 | 10.08.2025 | ஸ்ரீ பழண்டியம்மன் கோயில் திருவிழா அழைப்பிதழ் |
| எ.சா.ஆ.12 | – | ஸ்ரீ பழண்டியம்மன் கோயில் திருப்பணி நன்கொடை அழைப்பிதழ் |
| எ.சா.ஆ.13 | 12.06.2024 | ஸ்ரீ பிடாரி ஏகாத்தம்மன் மற்றும் ஸ்ரீ பழண்டியம்மன் கோயில் கும்பாபிஷேக விழா அழைப்பிதழ் |
| எ.சா.ஆ.14 | – | கட்டண இரசீது புத்தகம் |
| எ.சா.ஆ.15 | – | கட்டண இரசீது புத்தகம் |
| எ.சா.ஆ.16 | – | ஆலய இரப்பர் முத்திரை |
| எ.சா.ஆ.17 | | ஆலய இரப்பர் முத்திரை |
| எ.சா.ஆ.18 | – | ஆலய புகைப்படம் |

NILAVARASAN KASI    Digitally signed by NILAVARASAN KASI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருப்போரூர்.**